Registered as a News Peper · பக்கங்கள் 04 · விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM · PEOPLES DAILY · மக்கள் தினசரி

நாதம்: 02 · திருவள்ளுவர் ஆண்டு 2022 · ஐப்பசி 02 · (19-10-1991) · சனிக்கிழமை · ஓசை: 243

## யாழ்ப்பாணச்செய்திகளை அரசாங்கம் மறைக்கின்றது

யாழ்ப்பாணத்தில் நடக்கும் இராணுவ நடவடிக்கை பற்றிய விபரங்களை அதிகம் வெளியில் விடாமல் சிறிலங்கா அரசு மறைத்து வைத்திருக்கிறது. பாதிக்கப்பட்டோர் விபரம் எதுவும் வெளியிடப்படவில்லை என்று பி.பி.சி அதன் செய்தியாளர் கிறிஸ்ரொப்பர் மொறின் அனுப்பிய செய்தியை நேற்றிரவு அறிவித்தது. பருத்தித்துறையில் ஒரு உணவுக்களஞ்சியம் சிறிலங்கா விமானப் படையின் குண்டு வீச்சுத் தாக்குதலினால் சேதமடைந்துள்ளது. இத் தகவலை செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்தது என்று கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது என்று பி.பி.சி. அறிவித்தது.

# தீவகத்தில் இராணுவத்துடன் புலிகள் தொடர்ந்து மோதல்

## கவச வாகனம் சேதம், படகு மூழ்கடிப்பு மண்கும்பானில் இராணுவம் தரிப்பு

(நமது நிருபர்)

ஊர்காவற்றுறைப்பகுதியில் இருந்து மண்டைதீவு நோக்கி நேற்று முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்றுமாலைவரைதொடர்ந்தும் மோதல் நடைபெற்றது. இம் மோதலில்,சிறிலங்காஇராணுவத்தின் கவசவாகனம் ஒன்று சேதமாக்கப்பட்டது. ஒரு படகு மூழ்கடிக்கப்பட்டது பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இராணுவத்தினர் தற்பொழுது மண்கும்பான் கறுப்பாச்சி அம்மன் கோயிலடியில் தரித்துள்ளனர்.

விடுதலைப்புலிகள் தரப்பில் ஒருபோராளி வீரமரணமடைந்தார்.

நேற்று அதிகாலை ஐந்து மணியில், பலத்த தாக்குதல் கள் பாதுகாப்பு வழங்கின இந்நிலையில் முகாமில் ... கப்படகுடன் பல இராணுவத்தினரும் கொல்லப்பட்ட ...

## யோகாவிற்கு மக்கள் அஞ்சலி

ஆனையிறவில் கடந்த (4-8-91) அன்று நடைபெற்ற மோதலில் காயப்பட்டுசென்ற

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா கடற்படை பீரங்கித் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

நாகர்கோயில் குடத்தனை மணற்காடு ஆகிய பகுதிகள் மீது சிறிலங்கா கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்களை நடாத்தியிருக்கின்றனர்.

நேற்று அதிகாலை 5 00 மணி முதல் இத்தாக்குதல்கள் சில மணி நேரம் நீடித்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி யுத்த தந்திரம் வெளியிடமுடியாது

## பரு. துறை துறைமுகத்தில் பாஜ் முற்றாக சேதம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் மேற்கொண்ட குண்டுவீச்சுத்தாக்குதலினால் பருத்தித்துறை இறங்குதுறையில் நின்ற பாஜ் ஒன்று முற்றாகச் சேதமடைந்தது.

நேற்றுமுன்தினம் மாலை வடமராட்சிப்பகுதியை வட்டமிட்ட பொம்மர்கள் உணவுக் களஞ்சியப் பொருட்களை கப்பலில் இருந்து இறக்கி கரைக்குக் கொண்டுவர பயன்படுத்தப்பட்ட நான்கு பாஜ்களில் ஒன்று சேதமாக்கப்பட்டுள்ளது.

உணவுக் களஞ்சியம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினால் அங்கே கடந்த ஒரு வாரமாக கப்பலில் இருந்து இறக்கப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்ட பொருள்கள் அனைத்தும் சேதமடையக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. (உ)

## உணவுப் பொருள்கள் மீட்க அனுமதிக்க வேண்டுகோள்

(நமது நிருபர்)

உணவுக் களஞ்சியத்தில் உள்ள பொருள்களை மீட்டெடுக்க அனுமதி கோரி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமூடாக அரசிற்கு அவசர வேண்டுகோள் ஒன்றை அரசாங்க அதிபர் நேற்று விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் பருத்தித்துறை களஞ்சியம் மீது விமானங்கள் போட்ட குண்டுகளினால் அது பலத்த சேதமடைந்தது அதற்குள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள பொருள்கள் மழையில் நனைந்து சேதமடையக்கூடிய சூழ்நிலை

(4ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளர்கள் வடக்கே வரத்தடை

(கொழும்பு)

பத்திரிகையாளர்கள் சிறிலங்கா கூட்டுப்படைத் தலைமையகத்தின் அனுமதியின்றி வடக்கே செல்லமுடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் பத்திரிகையாளர்களோ, வெளியூர் பத்திரிகையாளர்களோ தாண்டிக்குளத்திற்கு அப்பால் செல்லமுடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது

(கொழும்பு)

பத்திரிகையாளர்கள் சிறிலங்கா கூட்டுப்படைத் தலைமையகத்தின் அனுமதியின்றி வடக்கே செல்லமுடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் பத்திரிகையாளர்களோ, வெளியூர் பத்திரிகையாளர்களோ யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு அப்பால் செல்லமுடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ். மாவட்டம் வழமைபோல் இயங்குகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் ஊரடங்கு உத்தரவு சிறிலங்கா அரசினால் அறிவிக்கப்பட்ட போதிலும் இம்மாவட்டத்தில் உள்ள அரச அலுவலகங்கள் யாவும் வழமைபோல் இயங்குகிறது. யாழ். செயலகம் உட்பட அனைத்து அரச அலுவலகங்கள், பாடசாலைகள் யாவும் இயங்கிவருவதுடன் இம்மாவட்டத்தில் வழமையைவிட பொதுமக்களின் நடமாட்டமும், வாகனப் போக்குவரத்துக்களும் அதிகமாகக் காணப்படுகின்றன (க)

## புலிகள் ஆதரவாளர் ஐவர் நெய்வேலியில் கைது

புலிகள் ஆதரவாளர்கள் என்று சந்தேகிக்கப்படும் ஐந்து இளைஞர்களை தமிழ்நாட்டு பொலிஸார் நெய்வேலியில் நேற்று முன்தினம் இரவு கைது செய்தனர்.

துள்ளனர்.

### விடுதலைப்புலிகள் தரப்பில் ஒருபோராளி வீரமரணமடைந்தார்.

நேற்று அதிகாலை ஐந்து மணியில், பலத்த தாக்குதல் ஒன்றை நடத்திய வண்ணம் சிறிலங்கா இராணுவம் சின்னமடு இராணுவ முகாமில் இருந்து வெளியேறினர். இவ்வாறு வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருக்கு விமானப்படை உலங்கு வானூர்திகள் பாதுகாப்பு வழங்கின.

இந்நிலையில் முகாமில் இருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில் புளியங்கூடலுக்கு அருகில் மோதல் இடம்பெற்றது. இம்மோதலின் போது இராணுவ கவசவாகனம் ஒன்று சேதமாக்கப்பட்டதுடன் பல இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.

அதேவேளை குடாக்கடல் வழியாக அராலித்துறை நோக்கி வந்த இராணுவத்தினர் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி யுத்த ... வெளியிடமுடியாது

### - கேணல் சரத் முனசிங்கா

(கொழும்பு)

வடமராட்சி மக்களை கோயில்களிலும் பாடசாலைகளிலும் தஞ்சமடையுமாறு கூறியது அவர்களின் பாதுகாப்பிற்காகவே என்று சிறிலங்கா கூட்டுப்படை தலைமைப் பேச்சாளர் சரத் முனசிங்க தெரிவித்துள்ளார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தீவகத்தின் பல இடங்களில் விமானக் குண்டுவீச்சு

(மண்டைதீவு)

மண்கும்பான், வங்களாவடி பகுதிகளில் நேற்று காலை பதினொரு மணியளவில் சிறிலங்கா விமானப்படையின் அவ்ரோ ரக விமானம் ஒன்று குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடாத்தியுள்ளது. பொதுமக்கள் நெருக்கமாக வாழும் குடியிருப்புக்களை இலக்காகக் கொண்டு விமானப்படையினரால் நடாத்தப்பட்ட இத்தாக்குதலினால் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவில்லை.

மேலும் மண்டைதீவுச் சந்திக்குச் சமீபமாகப் பண்ணைப் பாலம் பகுதியில் நேற்றுமாலை ஐந்து மணியளவில் ஐந்து குண்டுகள் விமானப்படையினரால் வீசப்பட்டன. பெரும்பாலானவை கடலினுள் விழுந்து வெடித்தபோதிலும் இரு படகுகள் முற்றாகச் சேதமுற்றன. அத்துடன் உலங்கு வானூர்தி ஒன்று நேற்று முழுவதும் இப்பகுதி வெங்கும் வட்டமிட்டுக்கொண்டிருந்தது.

## புலிகள் யுத்தநிறுத்தத்திற்கு உடன் படாதவரை இராணுவ நடவடிக்கை

### —விக்கிரமசிங்கா

யுத்த நிறுத்தத்திற்கு விடுதலைப் புலிகள் உடன்படாதவரை இராணுவ நடவடிக்கைகள் தொடரும் என சிறிலங்கா மந்திரி சபைப்பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்துகொண்டு பேசிய ரணில் விக்கிரமசிங்கா 'இனப்பிரச்சினைக்கு எல்லாக் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளக் கூடியதீர்வு

[4 ஆம் பக்கம் பார்க்க[

## மண்டைதீவுக் கடலில் இரு பீரங்கிப் படகுகள்

(மண்டைதீவு)

மண்டைதீவுக் கடலில் இரு பீரங்கிப் படகுகள் தரித்து நிற்பதாகத் தெரியவந்துள்ளது. ஊர்காவற்றுறைப்பகுதியிலிருந்து முன்னேற முயலும் இராணுவத்துக்கு உதவும் முகமாகவே இப்படகுகள் தரித்து நிற்பதாகக் கூறப்படுகின்றது. (88)

## கருப்பசாமி வெளியேற்றம்; இந்தியா ஆட்சேபம்

(கொழும்பு)

இந்திய வானொலி கொழும்புச் செய்தியாளர் கருப்பசாமி சிறிலங்காவை விட்டு வெளியேற வேண்டும் என்று உத்தரவிட்டிருப்பதை இந்தியா வன்மையாக ஆட்சேபித்திருக்கிறது.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகம் சிறிலங்கா வெளியுறவுத் திணைக்களத்திடம் நேற்று ஆட்சேபக் குறிப்பொன்றை வழங்கியுள்ளது.

சிறிலங்கா சமாதானகர் எம் எச் முகமட் ராஜினாமாச் செய்ததாகக் கருப்புசாமி அனுப்பிய செய்தியை முதலில் ஒலிபரப்பிய அனைத்து இந்திய வானொலியும், தூரதர்ஷனும் பிறகு தமது செய்தி தவறென்று மறுப்பையும் தெரிவித்தன.

பத்திரிகைத்துறையில் இது போன்ற தவறுகள் சகஜம் என்றும் அதற்காக கருப்பசாமி சரியான முறையில் மன்னிப்புக்கோரிய பின்பும் நாட்டை விட்டு வெளியேற்றுவது இருநாட்டு உறவுகளை வளர்க்க உதவாது என்றும் இந்தியத் தூதுவரகம் கூறியிருக்கும் அதேவேளை, அரசின் கட்டுப்பாட்டிலுள்ள

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கருப்பசாமி ராஜதந்திர அந்தஸ்து உள்ளவரா?

### — வோல்டர் பெர்னான்டோ

(கொழும்பு)

அகில இந்திய வானொலியின் இலங்கைக்கான நிருபர் கருப்பசாமி ராஜதந்திரி அந்தஸ்து உள்ளவரா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களக் கட்டுப்பாட்டு அதிகாரி வோல்டர் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

நேற்று கருப்பசாமியை விசாரணை செய்த வோல்டர் பெர்னான்டோவே இவ்வாறு தெரிவித்தார்.

## வீரவணக்கம்

### ஜீவன்

மண்கும்பானில் சிறிலங்கா இராணுவத்தினருடன் நேற்று நடைபெற்ற மோதலில் ஜீவன் (கனகு வதிஸ்வரன் ஆலடிச் சந்தி, ஓட்டுமடம்) என்ற போராளி வீரமரணமடைந்துள்ளார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

### கல்லூரிக்கு குண்டுவீசுவதில் இருந்தே

## தமிழர்களை அரசாங்கம் எவ்வாறு அணுகுகின்றது என்பது தெளிவு

(யாழ்ப்பாணம்)

மக்களை அச்சுறுத்திய நெருக்கடிகளின்போது புனித பத்திரிசியார் கல்லூரி அகதிகளுக்குப் புகலிடம் வழங்கியுள்ளது. நெருக்கடியான சூழ்நிலையில் ஒரு கல்லூரி மக்களுக்கு எவ்வாறு உதவலாம் என்பதற்கு இது ஓர் உதாரணமாகும். உங்கள் கல்லூரி குண்டு வீச்சு மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளது. இக்கல்லூரிக்கு இப்படியென்றால் நாட்டில் வாழும் தமிழர்களை அரசாங்கம் எந்த மட்டத்தில் அணுகுகிறது என்பது தெளிவாகிறது.

இவ்வாறு நேற்று புனித பத்திரிசியார் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய தென் இந்திய திருச்சபை யாழ். மறை மாவட்ட ஆயர் டி. ஜே. அம்பலவாணர் தெரிவித்தார்.

கல்லூரி ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசிய அதிபர் வண. பிரான்சிஸ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

தாவரவியல்
ஐங்கரநேசன்
யூனிவேர்சல்

கந்தர்மடம் —————— யாழ்ப்பாணம்



## தொலைத் தொடர்பு சேவை

யாழ்.குடா நாட்டில் பின்வரும் இடங்களில் முகவர்கள் தேவை.

1) சங்கானை 2) சுன்னாகம்
3) அச்சுவேலி 4) பருத்தித்துறை
5) சாவகச்சேரி 6) யாழ்ப்பாணம்

குறிப்பு :- சனி, ஞாயிறு நாட்களில் திறக்க அனுமதி உள்ள வர்த்தக உரிமையாளர்கள் விரும்பத்தக்கது. கடித மூலம் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

**ஸ்ரீ. கமலானந்தன்**
நில் சந்தா
மானிப்பாய். (R/1841)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## வெளிவாரிப் பட்டப்படிப்பு

துணைவேந்தர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பை ஆரம்பித்து வைக்கும் வைபவமும் 1990/91 ஆம் கல்வியாண்டு வெளிவாரி மாணவர்கள் பல்கலைக்கழக புகுமுகம் நிகழ்ச்சியும் 1991 10 22 ஆம் திகதி கைலாசபதி கலையரங்கத்தில் இடம் பெறவுள்ளன. வெளிவாரிப் பட்டப் படிப்புக்கு விண்ணப்பித்த மாணவர்கள் இந் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளும்படி கோரப்படுகின்றனர். நிகழ்ச்சிகள் இரு அமர்வுகளாக இடம் பெறவுள்ளன

## ஒத்திவைப்பு

யாழ்.பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்களினால் 20-10-91 அன்று யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற இருந்த சனசமூகநிலையங்களின் தலைவர்கள் செயலாளர்களுக்கான கலந்துரையாடல் மறு அறிவித்தல் வரை பின்போடப்பட்டுள்ளது என ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை மாலை 4-00 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

180,A நாவலர் வீதியில் இப் பணிமனை அமைந்துள்ளது.

## பனையை வளர்த்து பயன் பெறவும்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பிரதேசம் எங்கனும் பனம் நாற்றுக்களை நடுகை செய்வதற்கான காலம் இக் காலப்பகுதியாக இருப்பதனால் அனைவரையும் இந் நாற்றுக்களை நட்டு பயன் பெறுமாறு பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியம் கேட்டுள்ளது.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகளுக்கான விரிவுரைகள்

கலைமுதற்தேர்வு
(G. A. Q)

வர்த்தகமுதற் தேர்வு
(FIRST IN COMMERCE


## 90-ம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில
08
-
04
-
1976

தாய் மண்ணில்
22
-
07
-
1991

**2 ஆவது லெப். எழில்**
**(சந்திரசேகரம் சசிதரன்)**

மானமிகு தமிழ் மகனே
மறத் தமிழர் குலப் புவியே
ஊனமென எம்மண்ணை
உருக்குலைத்த கொடியவரை
ஆனையிறவுக் களத்தில்
அஞ்சா தெதிர்த்தவனே
வானதிர மண்ணதிர
வனமதிர்ந்து எழுந்தாலும்
தானதிரா தெதிர் நின்று
தன்மானம் காத்தவனே
வானுள்ளவரை தமிழர்
மானம் முள்ள வரை வாழ்வாய்
எழில் கோலம் இம்மண்ணில்
என்றும் நிலைக்குமடா.

மயிலங்கூடல்,
இளவாலை.

உமது பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர், நண்பர்கள்
(B/8347)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



## நினைவு கூருகின்றோம்...

1991 - 10 - 19





அனுஷன் மேஜர் அன்ரனி

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரண மெய்திய

**பாஸ்கரன்** (மார்க்கண்டு இலங்கேஸ்வரன் நடுப் பிரப்பந்திடல் திருக்கோணமலை)

யாழ். கோட்டைப் பகுதியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**சசி** (பொன்னையா பாலசிங்கம் - கரணவாய், கரவெட்டி)

கொட்டடி, ஆனைக்கோட்டை, கொக்குவில், இராசபாதை, உரும்பராய், கோப்பாய், வசாவிளான் ஆகிய பகுதிகளில் இந்தியப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போது படுகொலை செய்யப்பட்ட கொட்டடியைச் சேர்ந்த தம்பதிகள், இவர்களது 7 வயது மகன், உரும்பராயைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் மற்றும் ஒரு மாணவி உட்பட 24 தமிழர்கள்

1990 ஆம் ஆண்டு பலாலி முகாமைச் சூழ்ந்த பகுதிகளில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட ஒபரேசன் ஜெயசக்தியின் 3 ஆம் நாள் பலாலிப்பகுதியில் ஏற்பட்ட மோதலில் வீரமரணமெய்திய

**கப்டன் குட்டி | அலெக்ஸ்** (அம்மையப்பபிள்ளை கிருஷ்ணராசா - கிருஷ்ணராச வீதி பருத்தித்துறை)

**அனுஷன்** (கிருஷ்ணன் தங்கவேலு - வவுணத் தம்ப வீதி, குரும்பசிட்டி)

**2 ஆம் லெப். சீனன்** (சற்குரு சதீஸ் - நீர்வேலி

இடம் பெறவுள்ளன. வெளிவாரிப் பட்டப் படிப்புக்கு விண்ணப்பித்த மாணவர்கள் இந் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளும்படி கோரப்படுகின்றனர். நிகழ்ச்சிகள் இரு அமர்வுகளாக இடம் பெறவுள்ளன

முதல் அமர்வு- முதற்கலை மாணவர்கள் காலை 9.00 - காலை 11.00

இரண்டாவது அமர்வு- முதல் வர்த்தக மாணவர்கள் காலை 11.30 - 1.00

வெளிவாரி மாணவர்கள் தமது அனுமதி அட்டையை 20 10 91 வெளிவாரிப்பதிவு பிரிவில் பெற்றுக்கொள்ள வேண்டும். அனுமதி அட்டை இல்லாது வெளிவாரி மாணவர்கள் நிகழ்ச்சியில் பங்குகொள்ள முடியாதென் பதை அறியத்தருகின்றேன்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(B/3338)

வர்த்தகமுதற் தேர்வு

(FIRST IN COMMERCE

மேற்படி பட்டப்பாட நெறிகளுக்கான விரிவுரைகள் யாவும் 20-10-91 ஞாயிறு பி.ப 2மணிக்கு ஆரம்பமாகின்றன.

உதவிப் பதிவாளர்

**பட்டப்படிப்புகள் கல்லூரி**

148/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(/3331)

# இந்த இடம் ஞாபகமிருக்கிறதா!

**உங்கள் பொறுமையைச் சோதிக்க விரும்பவில்லை**

யாழ். மாநகர தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம் பெருமையுடன் தயாரித்து வழங்கும்

❋ பனம்பழ உறைபாணி (JAM) (ஸ்ரோபரிச்சுவையுடன்)

❋ பனம் சுவைக் கூட்டு (SAUCE)

நீங்கள் நம்பமாட்டீர்கள்! ஆனால் உண்மை!!

உள்ளூர் மூலப்பொருள்களைக் கொண்டு வெளிநாட்டுத் தயாரிப்புகளுக்கு நிகரான தயாரிப்புகள், சுத்தம், சுவை, தரம்.

சுவைத்துப்பார்த்தால் அவற்றின் தரம் விளங்கும்

உங்கள் காரச்சிற்றுண்டி வகைகளுக்கு மேலும் மெருகூட்டுவது

❋ பனம் சுவைக் கூட்டு (SAUCE

அது இது என அலட்டிக்கொள்ளாமல் அருகில் உள்ள விற்பனையாளரிடம் பெயர் சொல்லி கேட்டு வாங்குங்கள்.

**மறந்து விடாதீர்கள் இவை பனம் பொருள் உற்பத்திகள்**

விளம்பர அமைப்பு

செனித் ஜோ எகட்டன்

(B/3346)



## செல்வன் தர்மபாலன் புருஷோத்

மலர்வு: 04.10.1986

உதிர்வு: 18.10.1987

திதி 19.10.1991

எங்கள் அன்புச் செல்வமே - புருஷோத்
ஆண்டு நான்கு சென்றதடா! - உன்
அழகுத் திருமுகமும்,
பட்டுக் கன்னமதில் குழிவிழும்
புதுவழகுப் புன்னகையும்,
தத்தித் தவழ் நடையும் - என்
உள்ளமதில் தினமும் தெரியுதடா!
என்னை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு -நீயோ
மீளாத் துயில் கொண்டு விட்டாய் - நானோ
உன்னையெண்ணித் தினமும்
கண்ணீரால் அர்ச்சிக்கின்றேன்.

புங்குடுதீவு - 8

அப்பா,

உற்றார், உறவினர்

(R/1840)

கிருஷ்ணராசா - கிருஷ்ணராச வீதி பருத்தித்துறை)

**அனுஷன்** (கிருஷ்ணன் தங்கவேலு - வவுனைத் தம்ப வீதி, குரும்பசிட்டி)

**2ஆம் லெப். சீனன்** (சற்குரு சதீஸ் - நீர்வேலி வடக்கு)

**லெப். பேனாட்** (அல்பிரட் - கலியுகக்கண்ணன் நாகர் கோயில்)

**சின்னமணி** (ஏகாம்பரம் ஜெயந்தன் செல்வபுரம், உரும்பராய் தெற்கு)

**அமுதன்** (கதிரவேலு துரைராசா - உரும்பராய்)

இதே நடவடிக்கையின்போது ஏற்பட்ட மோதலில் வீரமரணமெய்திய

**மேஜர் அன்ரனி** (கனகசூரியா சிறிதரன் கல்முனை)

**ஆர்த்தி** (கோமதி தம்பாப்பிள்ளை - ஆரையம்பதி மட்டக்களப்பு)

**மூபின்** (இராசரத்தினம் மோகானந்தன் சித்திரை மொளி, இணுவாலை)

இதே நடவடிக்கையின்போது காங்கேசன்துறை திசவீரசிங்கம் முகாமில் இருந்து வெளியேற முற்பட்ட படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரமரணமெய்திய

**பற்றீசியா** (தெய்வமொழி குணம் - முள்ளியவளை, முல்லைத்தீவு)

**சேந்தன் | அப்பன்** (நாகமுத்து யோகராசா புன்னாலைக்கட்டுவன்)

**2ஆம் லெப். சதீஸ்** (வேலும்மயிலும் குணசீலன் நெடியகாடு, வல்வெட்டித்துறை)

மணலாற்றுப்பகுதியில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய

**அகஸ்ரின்** (திரவியம் சிவகுமார் - கருவேலன் கண்டல், ஒட்டிசுட்டான்)

யாழ்ப்பாணத்தில் எதிர்பாராத விபத்தில் எமைப் பிரிந்த

**பாலு** (அருணம்பலம், ரவிச்சந்திரன் - கருநாட்டுக் கேணி, முல்லைத்தீவு)

மன்னாகம் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட கைக் குழந்தை, பெண்கள் உட்பட 6 தமிழர்கள்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B/8348)

### ※ சிந்தனைக்கு ※

தாக்கமுடியும் அறத்தை; தகர்க்க முடியாது
அநியாய வன்முறை, அதிர்ச்சி ஊட்டும்;
அறத்தை அடிமைப்படுத்த முடியாது.

— ஜான் மில்டன்

ஈழநாதம்

51, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 19-10-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2808
[illegible]

## ஒருங்கிணைக்கப்பட்ட இன ஒடுக்கல்

வடபகுதியில் சிறிலங்கா இராணுவம் பெரும் இராணுவ முஸ்தீபுகளில் ஈடுபட்டுள்ளது இப்பகுதி எழுதப்படும் வரை மோதல் எதுவும் பெரியளவில் ஆரம்பிக்கவில்லை. சிறிலங்கா அரசாங்கத்தின் அறிவித்தலின்படி போர்க்களம் வடமாராட்சிப் பிரதேசமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படினும், சிலவேளைகளில், மோதல் தீவகப் பகுதியிலோ அல்லது மணலாற்றுக் காட்டுப் பகுதியிலோ இடம்பெறலாம் எனவும் சிறிலங்கா இராணுவத்தின் முஸ்தீபு நடவடிக்கையில் இருந்து உணரக் கூடியதாக உள்ளது.

தென்னிலங்கை அரசியல் நெருக்கடி, சிறிலங்கா இராணுவத் தளபதி ஹமில்டன் வணசிங்காவின் பதவிக் கால முடிவு, சார்க் மாநாடு என்பன இந்த இராணுவ நடவடிக்கையை விரைவுபடுத்த காரணமாக இருப்பினும் இது இன ஒடுக்கல் நடவடிக்கையின் கூட்டுத்திட்ட நடவடிக்கையின் ஒரு பகுதியாகும். இது கடந்த காலத்தில் சிறிலங்காவின் இராணுவத்தினருக்கு வடக்குப் போர்முனைகளில் ஏற்பட்ட அனுபவமும், சிங்கள புத்திஜீவிகளின் சிந்தனைகளும், ஆலோசனைகளும் சிறிலங்காவின் எதிர்கால நடவடிக்கைக்கான திட்டங்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவாகும்.

கடந்த வருடம் போர் தொடங்கியதில் இருந்து வடக்கில் இராணுவத்தினரால் குறிப்பிடத்தக்க வெற்றி எதையும் ஈட்ட முடியவில்லை. இராணுவத்தின் முகாம்கள் பல புலிகள் வசம் விழுந்தன. ஆனையிறவைக் காப்பாற்ற ஒருமாத காலம் சிறிலங்கா அரசாங்கம் பெரும் போர் ஒன்றை நடத்த வேண்டியிருந்தது. மணலாற்றிலோ, வவுனியாவிலோ சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் போது முன்னேறிய பகுதிகளைப் பாதுகாத்துக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

இந்நிலையானது வடக்கில் இராணுவம் பாரிய சில முகாம்களை வைத்திருக்கலாமே ஒழிய ஒரு பிரதேசத்தைக் கட்டுப் பாட்டிற்குள் வைத்திருத்தல் என்பது சாத்திய

## செயல்முறை வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

இன்று 19 ஆம் திகதியும் நாளை 20 ஆம் திகதியும் தொலைக் கல்வி ஆசிரியர் பயிற்சியைச் சேர்ந்த மாணவர்களுக்கான செயல் முறை வகுப்புக்கள் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும் எனவும், இவ்வகுப்புக்களில் 1 ஆம் 2 ஆம், 3 ஆம் வருட ஆசிரிய மாணவர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சிரேஷ்ட போதனாசிரியர் எம். எஸ். அலெக்சாண்டர் கேட்டுள்ளார். (அ)

# யாழ். விவசாயிகளுக்கு 'கெயர்' 3 கோடி 20 லட்சம் ரூபா உதவி

(நமது நிருபர்)

யாழ் மாவட்ட விவசாயத்தை ஊக்குவிக்கும் அகில உலக கெயர்ஸ் ஸ்தாபனம் மூன்று கோடியே இருபது இலட்ச ரூபாவை விவசாயிகளுக்கு வழங்க முன்வந்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் ஆரம்பமாகியுள்ள பெரும்போக உற்பத்திக்கும் சிறுதானிய உற்பத்திக்குமாக இத் தொகை பதினையாயிரம் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன என அதன் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இத் திட்டத்தின் கீழ் விவசாயி ஒருவருக்கு கொழும்பு பெறுமதிக்கு இரண்டாயிரம் ரூபா பெறுமதியான விவசாய உபகரணங்கள் வழங்கப்படும்.

**விதை நெல் விநியோகம்:-**

மேற்படி ஸ்தாபனம் இன்னுமொரு மூவாயிரத்து இருநூற்றி ஐம்பது விவசாயிகளுக்கு தலா ஒன்றரை புசல் வீதம் விதை நெல்லினை வழங்கி வருகிறது. இவை யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைக்கு வழங்கப்பட்டுள்ளன அவை மூலம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களூடாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் ஏழாயிரம் மண்வெட்டிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இவர்கள் இதற்குத்தேவையான பசளைகளுக்காக கிடைக்கும் இயற்கைப்பசளைகளைப் பயன்படுத்தவேண்டும் எனவும் அவ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

**சிறுதானிய விநியோகம்:-**

சிறுதானிய உற்பத்தியில் ஈடுபடும் பதினோராயிரத்து ஏழு நூற்றி ஐம்பது விவசாயிகளுக்குத் தேவையான சிறுதானியங்கள் அடுத்த மாதம் முதல் வழங்கப்படவுள்ளன. இவ் உற்பத்திக்காக குரக்கன், சௌபி, மரக்கறி விதைகள் ஆகியன வழங்கப்படவுள்ளன.

இவ்வருடம் செப்டம்பர் மாதம் முதல் அடுத்த ஆண்டு ஆவணிவரையுமான ஒருவருட காலப் பகுதிக்கு மேற்படி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது விவசாயிகள் பெறும் கடனில் இருபத்தைந்து வீதத்தைமட்டுமே திருப்பிச் செலுத்துதல் வேண்டும் இவ் அவர்கள் உற்பத்தி செய்யும் விளை பொருளாகவே மீளப் பெறப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி ஸ்தாபனம் கடந்த மாதம் பதினையாயிரம் விவசாயிகளுக்கு தேவையான பொருள்களை இலவசமாக வழங்கியது தெரிந்ததே.

கடந்த போகத்திற்கு வழங்கப்பட்ட உதவியை விவசாயிகள் பயனுள்ளவிதத்தில் பயன்படுத்தினர் எனவும் இத் திட்டம் தாம் எதிர் பார்த்தளவு வெற்றியை தந்துள்ளதாகவும் அவ் அதிகாரிமேலும் தெரிவித்தார். (உ)

## குறுகிய கால அறிவித்தலில் தபால் திரட்ட முடியவில்லை

(யாழ்ப்பாணம்)

குறுகிய கால அறிவித்தலில் தம்மால் அனைத்துப் பகுதி தபால்களையும் திரட்டிக் கொழும்பிற்கு அனுப்ப முடியாதிருப்பதாக யாழ் பிரதம தபாலக அதிகாரி ஒருவர் கவலை தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்டத் தபால்கள் அனைத்தும் கப்பல் மூலமாக கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்படுவது தெரிந்ததே. இவற்றை அனுப்ப வரும் பல பொதுமக்கள் அண்மைக்காலமாக ஏமாற்றமடைந்து திரும்பிச் செல்வது குறித்து கேட்டபோதே அவ் அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில் இதற்குப் பொறுப்பாகச் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனம் ஒரு சில மணி நேரத்திற்குள் தபால்களை கப்பலுக்கு அனுப்பி வைக்குமாறு தமக்கு தகவல் தெரிவிப்பதால் தாம் கைவசமுள்ள தபால்களை அனுப்பி வைப்பதாகவும் இதனால் வெளியூர் தபால்களை அனுப்ப முடியாத நிலை ஏற்படுவதாகவும் தெரிவித்தார்.

தமக்கு போதிய அவகாசம் இருக்கும் பட்சத்தில் அனைத்துத் தபால்களையும் திரட்டி அனுப்பக் கூடியதாக இருக்கும் எனவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார். (உ)

## வவுனியாவில் கடும் மழை பயணிகள் பெரும் சிரமம்

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் தொடர்ந்து பெய்துவரும் மழையால் தாண்டிக்குளம் ஊடாகச் செல்லும் பயணிகள் கஷ்டப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

சாந்தசோலை சுற்று வழிப் பாதையில் உள்ள வயல் வெளிகளில் தண்ணீர் தேங்கியிருப்பதால் சேறும் சகதியுமாக போக்குவரத்து செய்வோர் பல கஷ்டங்களுக்கு உள்ளாகின்றனர் என்றும் இவர்கள் சேற்றுப் பகுதியூடாக ஆறுமைல் தூரம் செல்லவேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஜேர்மனில் காலையிழந்த இலங். நாடுதிரும்பினார்

(கொழும்பு)

ஜேர்மனியில் வலதுசாரி இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் காலை இழந்த இலங்கையர் ஒருவர் இலங்கை திரும்பியுள்ளார்.

ஜேர்மனியில் இனவெறி கொண்டவர்களே இவ்வாறு அகதிகளை தாக்குகின்றனர் என்றும் அந்த இளைஞர் தெரிவித்துள்ளார்.

## தமிழக சிறைச்சாலையை நவீன மயப்படுத்த மத்திய அரசிடம் நிதியுதவி

## கிளிநொச்சி, மன்னார் தபால்

நிலை ஏற்பட்டது.

இந்நிலையானது வடக்கில் இராணுவம் பாரிய செலவில் முகாம்களை வைத்திருக்கவே ஒழிய ஒரு பிரதேசத்தைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருத்தல் என்பது சாத்தியமற்றது என்பதை தெளிவாக உணர்த்தியது. இந்நிலையில்தான் சிறிலங்கா அரசாங்கம் இராணுவ நடவடிக்கை என்பது பிரதேசத்தை கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் என்ற நிலையை மாற்றி விநியோகப் பகுதிகளை மட்டுப்படுத்திக் கொண்டு வருதல் என்ற யுக்தியைக் கையாளத் தொடங்கியுள்ளது. இம்முறை சிறிலங்கா திட்டமிட்டிருக்கும் நடவடிக்கை பெரும்பாலும் இதனையே மையமாகக் கொண்டிருக்கும்.

சிறிலங்கா இராணுவம் குறிப்பிடுவது போன்று வடமராட்சி மீதுதான் இராணுவ நடவடிக்கை என்றால் அவர்களின் பிரதான நோக்கம் வடமராட்சி முழுவதையும் கைப்பற்றுவதாக இருக்காது ஏனெனில் அது சாத்தியப்படப் போவதில்லை. இதேவேளை இந்நடவடிக்கையால் பெரும் பொருளாதார அழிவுகளையும், சொத்துக்களுக்கான இழப்பையும் ஏற்படுத்த முடியும்.

பருத்தித்துறை துறைமுகம் ஊடாகப் பொருள்கள் இறக்கப்படுவதை சிறிலங்கா அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்தே விரும்பவில்லை. ஆனால், தவிர்க்க முடியாத காரணத்தினால் அனுமதித்திருந்தது. தற்பொழுது இராணுவ நடவடிக்கை மூலம் பருத்தித்துறை துறைமுகத்தைக் கைப்பற்றின் தமிழர்மீது பெரும்பொருளாதாரத் தடையைத் தீவிரமாக்கி, பெரும் இன்னலுக்கு உள்ளாக்குவதன் மூலம் போராட்டத்தைத் தோற்கடிக்கலாம் என எண்ணுகின்றது. ஒரு பிரதேசத்தை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியாது என்று தெரிந்தும் மேற்கொண்டும் மேற்கொள்ளும் நடவடிக்கை அதையே வெளிக்காட்டுகின்றது.

யாழ். குடாநாட்டில் இராணுவ நடவடிக்கை எனில் லட்சக் கணக்கில் மக்கள் அகதிகளாவர் என்பது சிறிலங்காவிற்குத் தெரியும். அவ்வாறு உருவாக வேண்டும் என்பதே சிறிலங்காவின் திட்டமும் கூட.

இராணுவ நடவடிக்கையின் மூலம் லட்சக்கணக்கில் அகதிகளாக வெளியேறுகின்ற போது அவர்களை பராமரிக்காது. அகதி முகாம்கள் அமைப்பதற்கு தடைகள் விதித்தும், நிவாரணப் பொருள் விநியோக அளவில் வெட்டை ஏற்படுத்தியும், புனர்நிர்மாண வேலைகளுக்கு தடைவிதித்தும் இன ஒடுக்கலைத் தீவிரப் படுத்துவது சிறிலங்காவின் திட்டமாகும்.

சிறிலங்காவின் இன ஒடுக்கல் நடவடிக்கையானது. தற்பொழுது ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு நடவடிக்கையாக மாறியுள்ளது. இராணுவ மேலாதிக்கம் சாத்தியப்படா நிலையில் இந்த நிலை உருவாகியுள்ளது ஆகையினால் இதனைத் தமிழரும் ஒருங்கிணைந்த ரீதியில் ஒன்றிணைந்து எதிர் கொள்ள வேண்டும். அப்பொழுது தான் பேரினவாத சக்தியிடம் இருந்து தமிழர் தேசிய இனம் தன்னைக் காத்துக் கொள்ள முடியும்.

# கிளிநொச்சி, மன்னார் தபால் வாரம் ஒருமுறை செல்கிறது

யாழ். பிரதம தபாலகத்தில் சேரும் மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களுக்குரிய தபால்கள் வாரத்திற்கொரு தடவை சைக்கிள் மூலம் அந்தந்த மாவட்டங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருவதாகத் தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களுக்குரிய தபால்கள் கப்பலில் எடுத்துச்செல்லப்பட்டு பின்னர் கொழும்பில் இருந்து ரயில்மூலம் வவுனியா நகரப்பகுதிவரை எடுத்துவரப்பட்டுவிநியோகிக்கப்படுவதாக அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார். (அ)

# மத்திய அரசிடம் நிதியுதவி

(சென்னை)

தமிழகத்திலுள்ள சிறைச்சாலைகளை நவீனமயப்படுத்த மத்திய அரசிடம் நிதி கோரியிருப்பதாக மாநில சட்டத்துறை அமைச்சர் சே. என். கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளார்.

கடந்த இரு வருடங்களில் தமிழகத்தில் விடுதலை புலிகளின் நடவடிக்கைகளினல் சிறைப்பிடிக்கப்பட்ட தீவிரவாதிகளின் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதால் சிறைகளை நவீனமயமாக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும் இந்த நிதியினை மத்திய அரசாங்கம் வழங்க வேண்டுமென்றும்,

அத்துடன் ஜம்மு காஷ்மீர் தீவிரவாதிகள் பலரும் இங்கு சிறை வைக்கப்பட்டுள்ளதால் மேலும் பல வசதிகள் செய்யப்பட வேண்டும் என்றும் கிருஷ்ணசாமி கேட்டுக் கொண்டார்.

## சர்வதேச சட்டத்திற்கு உட்படாதவரை

# இஸ்ரேலுடன் அமெரிக்கா நட்புறவு பாராட்ட மாட்டாது

## -ஜேம்ஸ் பேக்கர்

இஸ்ரேல் சர்வதேச சட்டங்களுக்கு உட்படாத வரையிலும், ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப்பிரதேசங்களிலிருந்து வெளியேறக் கோரும் ஐ.நா. சபைத்தீர்மானத்தை அமுல் செய்யாத வரையிலும் இஸ்ரேலுடன் அமெரிக்கா நட்புறவுபாராட்டமாட்டாது என அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் தெரிவித்துள்ளார்.

டமாஸ்கஸ்ஸில் சிறிய அதிபர் அல்ஆசத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்திய பின்னர் இஸ்ரேலுக்கு புறப்படுவதற்கு முன்பாக நடத்திய செய்தியாளர்மாநாட்டிலேயே ஜேம்ஸ் பேக்கர் இதனைத் தெரிவித்தார் ஜெருசலேமில் பேக்கரின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து யூதர்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தியுள்ளனர்.

# உணவு விடுதியில் 25பேர் சுட்டுக் கொலை

(டெக்ஸாஸ்)

அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்திலுள்ள உணவு விடுதியொன்றில உணவு அருந்திக் கொண்டிருந்தவர்கள் மீது திடீரென துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதில் இருபத்தைந்து பேர் கொல்லப்பட்டனர் இத்துப்பாக்கிப் பிரயோகத்தை நடாத்திய நபர் பின்னர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துள்ளார்

# பதின்நான்காம் மாவட்டம் நேற்று உதயமாகியது

தஞ்சாவூர் மாவட்டத்தை இரண்டாக பிரித்து நாகபட்டினம் மாவட்டம் ஒன்றை நிறுவிய தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று அதனைத்திறந்து வைத்தார்.

24 லட்சம் மக்களை உள்ளடக்கிய இந்த மாவட்டத்தில் பதினொரு தாலுக்காக்களும் பத்தொன்பது பஞ்சாயத்துக்களும், ஐந்து நகர சபைகளும் 1155 கிராமங்களும் அடங்குகின்றன.

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட சிக்கனக் கடனுதவி.கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் விசேட பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 30 மணிக்கு யாழ் இந்துமகளிர் ஆரம்ப பாடசாலையில் நடைபெற இருக்கின்றது சகல அங்கத்துவ சங்கங்களின் பிரதிநிதிகளையும் தவறாது சமுகம் தரும்படி அதன் செயலாளர் கேட்டுள்ளார். (உ)

## ஏழை நாடுகள் வாங்கிய

# 1700கோடி டொலர் கடனை பிரித். தள்ளுபடி செய்தது

பிரித்தானியாவிடம் ஏழை நாடுகள் வாங்கிய 1700கோடி டொலர் பெறுமதியான கடன்களை அந்தநாடுதள்ளுபடிசெய்துள்ளதாக அறிவித்துள்ளது.

பிரித்தானியாவின் இந்த அறிவிப்பை அந்நாட்டின் பிரதமர் ஜோன் மேஜர் ஹராரேயில் நடைபெறும் கொமன்வெல்த் உச்சி மாநாட்டின் இரண்டாவது நாள் கூட்டத்தில் அறிவித்தார்.

மிகவும் ஏழை நாடுகளால் பிரித்தானியாவிடம் வாங்கப்பட்ட கடன்களே தள்ளுபடி செய்யப்பட்டது எனினும எந்தெந்த நாடுகள்வாங்கிய கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டதுஎனஅறிவிக்கப்படவில்லை.

பிரித்தானியாவின் இந்த அறிவிப்பை கனடா வரவேற்றுள்ளதோடு அவுஸ்திரேலியா இந்த அறிவிப்பு பரிசீலனைக்குரியதுஎனதெரிவித்துள்ளது.

# வெள்ளை பிரம்பு அன்பளிப்பு

ஜெயப்பூர் செயற்கைக் கால் நிறுவனத்தால் லயன்ஸ் கழகத்துக்கு வெள்ளைப் பிரம்பொன்று கையளிக்கப்பட்டது.

# இஸ்ரேல் அரபுக்களை இணைப்பதில் பெருமளவு முன்னேற்றம் - பேக்கர்

(ஜெருசலேம்)

இஸ்ரேலையும், அதன் அண்டைய அரபு நாடுகளையும் இணங்க வைப்பதில் பெருமளவு முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக ஜேம்ஸ் பேக்கர் கூறியுள்ளார். இஸ்ரேலின் பிரதமர் யிட்சாக் ஷாமிருடன் ஏழு மணித்தியாலங்கள் நீடித்த நீண்ட பேச்சுவார்த்தைக்குப் பின்னர் செய்தியாளரிடம் பேசுகையில் அமெரிக்க வெளிநாட்டமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் இவ்வாறு குறிப்பிட்டார். வளைகுடா யுத்தத்தின் பின்னர் இஸ்ரேலையும் அதன் அண்டைய அரபு எதிரி நாடுகளுக்கும் இடையே சமரசம் காண அமெரிக்கா முழு மூச்சுடன் ஈடுபட்டு வருவது தெரிந்ததே.

உத்தேச மத்திய கிழக்கு சமாதான மாநாடு எதிர்வரும், அக்டோபர் இருபத்தொன்பதாம் திகதியளவில் மஸ்றிச் நகரில் நடைபெறலாம் என நம்பப்படுகின்றது. இம்மாநாட்டை ஒருங்கிணைக்கும் பணியில் சோவியத் வெளிநாட்டமைச்சர் டொம்கின் ஈடுபட்டு வருகின்றார். அவர் நேற்று ஜெருசலேமில் அமெரிக்க வெளிநாட்டமைச்சரைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

இதேவேளை இம்மாநாட்டில் பங்கு கொள்வதற்கு கிழக்கு ஜெருசலேம் காஸா மற்றும் ஜோர்தான் மேற்குக் கரை போன்ற ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் ஏழு பாலஸ்தீனியர்களுக்கு பாலஸ்தீன விடுதலை இயக்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இவர்கள் பதினாறு பேர் கொண்ட அரபுத் தூதுக்குழுவில் அங்கம் பெறவுள்ளனர். எனினும் சமாதான மாநாட்டில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் பிரதிநிதித்துவத்திற்கு இஸ்ரேல் எதிர்ப்புத் தெரிவித்துவருகின்றது.

## தடை செய்யப்பட்ட பொருள்களுக்கு அனுமதி

(கொழும்பு)

தடைசெய்யப்பட்ட பொருட்களை வடக்கே கொண்டு செல்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருள்கள் தவிர்ந்த தடைசெய்யப்பட்ட சில பொருள்களை வீட்டுப்பாவனைக்குரியவை எடுத்துச் செல்ல கொள்ளுப்பிட்டியில் உள்ள புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### வரிச் சலுகை

வீடுகள், கடைகள், அலுவலகங்களை நிர்மாணிக்கவும், கொள்வனவு செய்யவும் கறுப்புப் பணம் முதலிடப்பட்டால் மூன்று வருட காலவரி மன்னிப்பு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக அமைச்சு நேற்றுமுன்தினம் இதனை அறிவித்துள்ளது.

## இடம்பெயர்ந்த மக்களுக்கு அரச சார்பற்ற நிறுவ. உதவி

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப்பகுதியில் இருந்தும் தீவகத்தில் இருந்தும் இடம் பெயர்ந்த மக்களுக்கு பல்வேறு அரசசார்பற்ற நிறுவனங்கள் உதவி அளித்து வருகிறன.

இம்மக்கள் தங்கியிருக்கும் பல்வேறு முகாம்களின் தற்பொழுது அரசசார்பற்ற நிறுவனங்களுக்கிடையில் உதவி அளிப்பதற்காக பகிரப்பட்டிருக்கிறது. இந்த அரசசார்பற்ற நிறுவனங்கள் இம்முகாம்களில் உள்ள மக்களின் உணவு, குடிநீர், சுகாதார வசதிகளின் பொறுப்பாக செயலாற்றும். (ஈ)

## பீரங்கித் தாக்குதல் தவிர வேறு சம்பவம் இல்லை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கில் அதிகாலை நடைபெற்ற கடற்படையினரது பீரங்கித்தாக்குதலைத் தவிர நேற்று முழுவதும் வடமராட்சிப்பிரதேசம் அமைதியாகக் காணப்பட்டது.

இப்பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேறிய போதிலும் இப்பகுதிகளில் இறிலங்கா படையினரது தாக்குதல்கள் எதுவும் நடைபெறவில்லை.

இதனால் இடம்பெயர்ந்த மக்கள் பலர் நேற்றுமாலை தமது வீடுகளைப் பார்வையிடுவதற்காக வடமராட்சிப் பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். (ஈ)

## சைரஸ் யூக்கோ விரைவு யுத்தநிறுத்த புதிய முயற்சி

(பெல்கிரட்)

யூக்கோஸ்லாவியாவில் சண்டையில் ஈடுபட்டிருக்கும் பிரிவினர்களுக்கிடையே யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்த ஐரோப்பிய பொருளாதார சமூகம் புதிய முயற்சி ஒன்றை மேற்கொண்டுள்ளது. ஐரோப்பிய சமூகத்தின் புதிய ஆலோசனைகள் குரோசியத் தலைவர்களிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து யூக்கோஸ்லாவியாவின் ஜனாதிபதி செயலகம் ஆறு குடியரசுகளின் தலைவர்களையும் கொண்ட கூட்டமொன்றை நடாத்தியுள்ளது. செப்டம்பர் மாதத்தின் பின் இக் கூட்டம் நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும். இதேவேளை யூக்கோவின் பல்வேறு தலைவர்களுடன் பேச்சு நடத்துவதற்காக அமெரிக்காவின் முன்னாள் வெளிநாட்டமைச்சர் சைரஸ் வான்ஸ் பெல்கிரட் பயணமாகியுள்ளார். எனினும் குரோசியாவின் வடக்கிலும் கிழக்கிலும் கடும்மோதல்கள் தொடர்ந்து வருகின்றன.

## மாதகலில் பீரங்கித்தாக்கு

(யாழ்ப்பாணம்)

மாதகல் கடற்பிராந்தியத்தில் இருந்து சிறிலங்கா கடற்படையினர் குடியிருப்புப்பகுதிகள் மீது பீரங்கித்தாக்குதல்களை நடாத்தியுள்ளனர். நேற்று முற்பகல் நடாத்தப்பட்ட இத்தாக்குதல்களினால் பெரியளவிலான சேதம் எதுவும் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை. (ஈ)

### உணவுப் பொருள்கள்

இருப்பதை சுட்டிக்காட்டியே அவற்றை அங்கிருந்து அகற்ற அனுமதி அளிக்குமாறு அரசாங்க அதிபர் மேற்கண்ட கோரிக்கையை அரசிடம் விடுத்துள்ளார்.

மேற்படி களஞ்சியத்தில் 700 மெற்றிக் தொன் உணவு வகைகள், 13 மெற்றிக்

### தீவகத்தில்

படகு மூழ்கடிக்கப்பட்டது. அதில் இருந்த இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டனர்.

இழப்புக்களுடன் முன்னேறிய இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில் மண்கும்பான் சாட்டி அம்மன் கோயிலடியில் மற்றுமொரு மோதல் இடம்பெற்றது. இம்மோதலில் இராணுவத்தினருக்கு சேதங்கள் ஏற்பட்டதாயினும் விபரங்கள் கிடைக்க

மனித உரிமைகள் விவகாரங்களுடன்

## உதவிகளை இணைப்பது ஏற்புடைய செயல் அல்ல

\- நரசிம்மராவ்

(ஹராரே)

மனித உரிமைகள் பிரச்சினையுடன் வெளிநாட்டு உதவிகளை இணைக்கும் யோசனை ஏற்புடையதல்ல என்று இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தெளிவுபடக் கூறியுள்ளார். இது தொடர்பாக காமன் வெல்த் அமைப்பிலுள்ள முன்னேறிய ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் கவலையையும் அவர் வெளிப்படுத்தினார்.

சிம்பாப்வே தலைநகர் ஹராரேயில் நடைபெற்ற காமன் வெல்த் நாடுகளின் மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு இந்தியா திரும்பமுன் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும், வெளிநாட்டு உதவி வழங்குவதற்கு மனித உரிமைகள் பிரச்சினையை ஒரு நிபந்தனையாக விதிக்க பிரிட்டன் எடுக்கும் முயற்சிகளைக் கண்டித்தார். இதனைக் காமன்வெல்த் என்றும் தெரிவித்தார். அத்துடன் இந்தியாவைப் பிளவுபடுத்தும் சக்திகளை இந்தியா ஒருபோதும் சகித்துக்கொள்ளாது எனவும் சுட்டிக்காட்டினார். துருப்புக்களை ஈடுபடுத்துமளவுக்கு இந்திய பாகிஸ்தான் எல்லையில் பதற்றம் ஏற்படாது எனவும் அவர் தெரிவித்தார்.

### வடமராட்சி

வடமராட்சியில் மேற்கொள்ளப்படும் யுத்த தந்திரத்தை வெளியிடமுடியாது என்றும் அங்கு பொது மக்களை

## மரண அறிவித்தல்

### நடராசா இராசரத்தினம்

(S. K. கனகரத்தினம் ஸ்ரோர்ஸ், வவுனியா)

காரைநகர், கள்ளித்தெரு, தங்கோடையைச் சேர்ந்த அம்பலவாணர் நடராசா இராசரத்தினம் காலமானார். இவர் செல்வராணியின் அன்புக் கணவரும், நடராசா கமலாதேவியின் அன்பு மகனும், சபாரத்தினம், வள்ளியம்மையின் அன்பு மருமகனும், இராசேஸ்வரி, இராசகுமாரி, சூரியகுமாரன் (வீதி அபிவிருத்தி அதிகாரசபை, முல்லைத்தீவு), நந்தகுமாரன் ஆகியோரின் சகோதரரும், க. விமலச்சந்திரன், ச. முத்தையாபிள்ளை, ச. தர்மகுலசிங்கம் (ஈழநாதம்), ச. சிவஞானசுந்தரலிங்கம் (உதயன்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு மூளாயில் நடைபெற்று பூதவுடல் மூளாய் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய் றோட்,
மூளாய்.

தகவல்:
ச. தர்மகுலசிங்கம்

(B/3352)

கோரிக்கையை அரசிற்கு விடுத்துள்ளார்.

மேற்படி களஞ்சியத்தில் 700 மெற்றிக் தொன் உணவு வகைகள், 13 மெற்றிக் தொன் பாமா வகைகள், 900 மெற்றிக்தொன் உரம் ஆகியன உள்ளன. ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்குள்ள பொருள்களை அப்புறப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது அரசாங்கம் அனுமதி வழங்கும் பட்சத்தில் அவை உடனடியாக எடுத்து வரப்பட்டு வேறு இடங்களில் களஞ்சியப்படுத்தப்படுமென அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (உ)

கறுப்பசாமி

'டெய்லி ஒப்சேவர்' பத்திரிகை அதன் ஆசிரிய தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது. இது மன்னிக்கமுடியாத குற்றம் என்று வர்ணித்திருக்கும் 'டெய்லி ஒப்சேவர்' இந்தியத்தூதுவரகமே இத்தகைய தவறான ஆதாரமற்ற தகவலை வழங்கியிருக்கலாம் எனவும் கருத்து தெரிவித்துள்ளது.

இதனிடையில் கறுப்புசாமி விவகாரம் இருநாட்டு விவகாரங்களில் தேவையற்ற சிக்கல்களை உருவாக்கும் என்றும், சாதாரண மனிதர்களைப்போலவே பத்திரிகையாளர்களும் தவறு செய்யக்கூடியவர்களே என்றும் 'திஐலண்ட்' பத்திரிகை தனது ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது. கறுப்பசாமி தவறைத் திருத்திக் கொண்ட பின்பும் சிறிலங்கா அரசு இவ்வாறு நடந்து கொள்வது தமக்கு அதிர்ச்சி அளிப்பதாக வெளிநாட்டுசெய்தியாளர் சங்கம் கருத்துக் கூறியுள்ளது.

கோயிலடியில் மற்றுமொரு மோதல் இடம் பெற்றது. இம்மோதலில் இராணுவத்தினருக்கு சேதங்கள் ஏற்பட்டதாயினும் விபரங்கள் கிடைக்கவில்லை. விடுதலைப்புலிகள் தரப்பில் பேராளி ஒருவர் வீரமரணமடைந்தார். இம்மோதலைத் தொடர்ந்து மண்கும்பான் கறுப்பாச்சி அம்மன் கோயிலடியில் இராணுவத்தினர் தரித்துள்ளனர்.

தமிழர்களை

யோசப் புலமைப் பரிசில் பெறும் மாணவர்களை குறிப்பிட்ட இரண்டு மூன்று தெரிவுப் பாடசாலைகளில் அனுமதித்து ஏனைய பாடசாலைகள் திறமையான மாணவர்கள் சேரும் நலனை இழக்கச் செய்து வரும் தரக்குறைவான முறைகளை நாம் மனதில் கொள்ள வேண்டும் குறை காண் விமர்சகர்களும், புதினப் பத்திரிகைச் செய்தியாளரும் பாடசாலையின் நிர்வாகத்தையும் கொடுக்கப்படும் கல்வியின் தரத்தையும் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் மாத்திரம் திறனாய்வு செய்வதை நான் எச்சரிக்க விரும்புகிறேன் என்றார்.

விடுதலையின் விலை தியாகமாகும். இன்றைய மாணவ பரம்பரை அதைக் கூடுதலாகக் கொடுத்துள்ளார்கள். நாம் மனித மாண்புடன் தமிழர் எனத் தலை நிமிர்ந்து வாழும் நாள் விரைவில் விடிய வேண்டும் என்பதே எமது நம்பிக்கையும் பிரார்த்தனையுமாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ். ஆயர் அதி வண. வ தியோகுப்பிள்ளை தலைமையில் விழா நடைபெற்றது. (21)

வடமராட்சி

வடமராட்சியில் மேற்கொள்ளப்படும் யுத்த தந்திரத்தை வெளியிடமுடியாது என்றும் அங்கு பொது மக்களை கோயில்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சமடையுமாறு கூறியிருப்பது அவர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையே என்றும் சரத் முனசிங்கா தெரிவித்துள்ளார்.

ஆனால் 1987 ஆம் ஆண்டு வடமராட்சிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் போதும் இவ்வாறே பாடசாலைகளிலும் கோயில்களிலும் தஞ்சமடையச் சொன்ன இராணுவத்தினர் அந்த இடங்களில் விமானத்திலிருந்து குண்டுகளை வீசித்தாக்கினர் என்பதும் அனைவருக்கும் தெரிந்ததே.

சிறிலங்கா

தன.

இத்தாக்குதல்களால்பொது மக்களின்குடியிருப்புக்கள் சில சேதமடைந்தன என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (க)

யோகாவிற்கு

16-10-91 அன்று வீரமரணமடைந்த வீரவேங்கைகயோகா (கருப்பையா யசோதாதேவி, மூதூர்) என்ற போராளியின் புகழுடல் சென்ற (17-10-91) பிற்பகல் 2 மணியளவில் திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் வைக்கப்பட்டது. பெருந்திரளான மக்கள் வீரவேங்கைக்குத் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். வி. பு. ம. முன்னணியினரின் அஞ்சலிக் கூட்டம் முடிவடைந்ததும் பிற்பகல் 4 30 மணியளவில் இராணுவ மரியாதைகளுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கோப்பாய் மாவீரர் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது. (43)

எனவும் சுட்டிக்காட்டினார். துருப்புக்களை ஈடுபடுத்துமளவுக்கு இந்தியபாகிஸ்தான் எல்லையில் பதற்றம் ஏற்படாது எனவும் அவர் தெரிவித்தார்

## பேச்சுவார்த்தையை விரும்புகிறோம்

### வெங்கட்ராமன்

இந்தியா தனது அயல்நாடுகளுடனான அனைத்துப் பிரச்சினைகளையும் நேரடிப் பேச்சுக்கள் மூலம் தீர்த்துக் கொள்வதில் உறுதியாக இருப்பதாக இந்தியக் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் கூறியுள்ளார்.

அருணாசல பிரதேசத்தின் முக்கிய பகுதி ஒன்றில் உள்ள இராணுவத்தினரிடையே பேசும்போது இதனைத்தெரிவித்த திரு வெங்கட்ராமன் மேலும் பேசுகையில்,

நட்புறவுடன் இருக்கவேண்டும் என்பதில் இந்தியா நம்பிக்கை கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். அத்துடன் மற்றவர்களின் பிரதேசங்களுக்கு ஆசைப்படும் ஆக்கிரமிப்பாளர்களுமல்ல, ஒரு பகுதிக்கோ, உலகிற்கோ தலைமை தாங்க ஆசைப்படுவோரும் அல்ல எனவும் குறிப்பிட்டார். அதேசமயம் இந்தியா தனது பாதுகாப்பு நிலைமைகளில் மெத்தனமாக இருக்காது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

உடன்படாத

ஒன்றினை சமர்ப்பிப்பதே அரசின் நோக்கமென்றும்;

விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே போட்டு விட்டு யுத்த நிறுத்தத்திற்கு உடன்படாதவரை இராணுவ நடவடிக்கை தொடரும் என்றும் தெரிவித்தார்.

இதேநேரம் சமரச முயற்சியில் அமைச்சர் தொண்டமான் போக்றோர் ஈடுபடலாம் என்றும் அதற்குத் தடை இல்லை என்றும் ரணில் தெரிவித்தார்.


மூளாய் றோட், தகவல்:
மூளாய். ச. தர்மகுலசிங்கம்
(B/3352)



## கலந்துரையாடல்

யாழ். குடாநாட்டில் உள்ள சகல தொலைக் காட்சிப் படப் பிடிப்பாளர்களையும் நாளை (20.10.1991) ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு நிதர்சனம் அலுவலகத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பொறுப்பாளர்
நிதர்சனம்
தமிழீழம்
(B/3351)



யாழ். ஸ்ரீதர் திரையரங்கில்

## மாங்குளம் தகர்ப்பு

[விவரணப்படம்]

## இனியொரு விதி

[குறும்படம்]

ஆகியன அரங்கம் நிறைந்த காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றன.

தினசரி ஒரு காட்சியும் (4 மணிக்கும்) சனி, ஞாயிறுகளில் இரண்டு காட்சிகளும் (4, 6 மணிக்கும்) காண்பிக்கப்படும்.

[B/3203]



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.